தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13-10-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 37வது பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 37-வது பட்டமளிப்பு விழா, அக்டோபர் 15, 2016 அன்று காலை 11.30 மணியளவில் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான திரு. சிஎச். வித்யாசாகர் ராவ் அவர்கள் தலைமையேற்கிறார். மாண்புமிகு வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு துறைகளின் அமைச்சர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைவேந்தர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் புதிய அற நல்கை பரிசுகளையும், பதக்கங்களையும் அறிவிக்க உள்ளார். குஜராத் காந்திநகர் மேம்பட்ட ஆராய்ச்சி நிறுவன துணைவேந்தர் முனைவர். கு.ந. மகேசன் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா உரையாற்ற இசைந்துள்ளார்கள்.

இப்பட்டமளிப்பு விழாவில் மும்பை தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD) தலைவர் முனைவர். ஹர்ஷ் குமார் பன்வாலா மற்றும் கனடா மானிடோபா பல்கலைக்கழக பன்னாட்டு ஆராய்ச்சி துணைவேந்தர் முனைவர் திக்வீர் எஸ். ஜெயாஸ் ஆகியயோர் கௌரவ முனைவர் பட்டம் பெற உள்ளனர்.

இப்பட்டமளிப்பு விழாவில் 1229 மாணவர்கள் நேரடியாகவும் (in person) 640 மாணவர்கள் தபால் மூலமாகவும் (in absentia) பட்டங்களைப் பெற உள்ளார்கள்.

மக்கள் தொடர்பு அலுவலர்